# மாகாணக் கல்வித் திணைக்களம் – வடமாகாணம்

## இரண்டாந் தவணைப்பரீட்சை – 2018

**வரலாறு**

**சுட்டெண் : ……………………** **தரம் - 10** **நேரம் :- 3 மணி**

- **கவனிக்க.**
- **பகுதி I இன் முதலாம் வினா கட்டாயமானதாகும்.**
- **பகுதி II இலிருந்து ஐந்து வினாக்களுக்கு விடை தருக.**
- **எல்லாமாக ஆறு வினாக்களுக்கு விடை தருக.**

### பகுதி I

01.அ. கீழே (I) இல் குறிப்பிடப்பட்டுள்ள வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இடங்கள் அனைத்தையும் தரப்பட்டுள்ள இலங்கைப் புறவுருவப் படத்திலும் (II) இல் குறிப்பிடப்பட்டுள்ள வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இடங்கள் அனைத்தையும் தரப்பட்டுள்ள உலகப் புறவுருவப் படத்திலும் குறித்துப் பெயரிடுக.

i. மாந்தை, யான்ஓயா, பண்டத்தர, அநுராதபுரம், பொலன்னறுவை, கந்துருகொட, உதி நகரம், கோகண்ணத்தித்த, பத்தச நகரம், கோட்டை, பூநகரி, பாகியன்கல

(12 புள்ளிகள்)

ii. சென்னை, பாரசீகக்குடா, இத்தாலி, பர்மா, அராபிக் கடல், வடகொரியா

(06 புள்ளிகள்)

ஆ.(i) கீழே A, B, C, D ஆகியவற்றில் தரப்பட்டுள்ள வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த தகவல்களுக்குரிய விடைகளை ஒழுங்குமுறைப்படி உங்கள் விடைத்தாளில் எழுதுக.

A. பனாகடுவ செப்புச் சாசனத்துடன் தொடர்புபடும் மன்னன்

B. தென் மாகாணத்தில் அம்பாந்தோட்டை மாவட்டத்தில் இரணைமடுப் படிவிற்குரிய சரளைக்கற் படிவில் 125000 ஆண்டுகள் பழமையான கற்கால ஆதாரங்கள் கண்டறியப்பட்ட இடம்.

C. மக்களினால் கைவிடப்பட்ட குளக் கிராமம் அழைக்கப்பட்ட பெயர்.

D. முதலாம் கஜபாகு மன்னன் பத்தினித் தெய்வக் கோயில் திறப்பு விழாவிற்காகச் சென்ற இராச்சியம்.

(04 புள்ளிகள்)

- A, B ஆகியவற்றினால் காட்டப்பட்டுள்ள படங்களை அவதானித்து தரப்பட்ட வினாக்களுக்கான விடைகளை இலக்கங்களின் ஒழுங்கு முறையில் உங்கள் விடைத் தாளில் எழுதுக.

(ii) 1. ‘A’ இனால் காட்டப்படுவது யாது?

2. இது எக் காலத்துடன் தொடர்புபட்டது?

3. எப் பொருளில் இருந்து உருவாக்கப்பட்டுள்ளது?

4. இதன் மூலம் அக்கால மனிதரின் எந்த விடயத்தைப் பற்றி அறிந்து கொள்ள முடியும்.



(A)

(04 புள்ளிகள்)

(iii) 1. ‘B’ இனால் காட்டப்படுவது யாது?
2. இது அமைந்துள்ள மாவட்டம் யாது?
3. இதனுடன் தொடர்புபட்ட ஆறு யாது?
4. இவ் அமைப்பை உருவாக்கப் பயன்படுத்தப்பட்ட பொருட்கள் எவை?



(B)

(04 புள்ளிகள்)

## பகுதி II

02. 1) இலங்கை வரலாற்றை அறிவதற்காக இலங்கைக்கு வருகை தந்து நேரடி அனுபவங்களைப் பெற்று எழுதிய எழுத்தாளர்களின் தேசங்கள் காட்டப்பட்டுள்ளன. அவர்களுடைய பெயர்களை அடைப்புக்குறிக்குள் இருந்து தெரிவு செய்து ஒழுங்கு முறைப்படி எழுதுக.

A – சீனா

B – போர்த்துக்கல்

C – ஒல்லாந்து

(இபின்பதுதா, பாகியன்தேரர், ரிபைரோ, ரொபட் நொக்ஸ், பிலிப்ஸ் பல்டியஸ்)

(03 புள்ளிகள்)

2) மகாவம்சம், தீபவம்சம் என்பவற்றிற்கும் காலத்தால் முந்தியதாகக் கருதப்படும் நூல்கள் இரண்டைக் குறிப்பிடுக.

(04 புள்ளிகள்)

3) இலக்கிய மூலாதாரங்களை பயன்படுத்தும் பொழுது கவனிக்க வேண்டிய விடயங்கள் மூன்றைக் குறிப்பிட்டு ஒன்றை விளக்குக.

(05 புள்ளிகள்)

4) தொல்பொருள் மூலாதாரங்களின் மூன்று சிறப்புக்களை இலக்கிய மூலாதாரங்களுடன் ஒப்பிட்டு எழுதுக.

(06 புள்ளிகள்)

03. 1) இலங்கையில் கற்கால மனிதர்கள் உட்கொண்ட மூன்று உணவுப் பொருட்களைக் குறிப்பிடுக.

(03 புள்ளிகள்)

2) பின்வரும் தொல்பொருள் மூலாதாரங்கள் கண்டறியப்பட்ட இடங்களை அடைப்புக் குறிக்குள் இருந்து தெரிவு செய்து ஒழுங்கு முறைப்படி எழுதுக.

A - களிமண் ஓடக்கல்லறை

B - மத்திய கற்கால எலும்புக்கூடு

C - தாழ்நில ஈரவலயத்தில் வரலாற்றிற்கு முற்பட்ட கால மனிதனின் வாழிடம்

D - இரும்பு உருக்கு உலை

(சமனலவெவ, பாகியன்கல, பொத்தான கற்குகை, உடரஞ்சாமடம, மாதோட்டை)

(04 புள்ளிகள்)

3) பண்டைய இலங்கையின் குடியிருப்புகளின் பரம்பலில் செல்வாக்குச் செலுத்திய புவியியற் பின்னணிகள் மூன்றைக் குறிப்பிட்டு ஒன்றை விளக்குக.

(05 புள்ளிகள்)

4) முன் வரலாற்றுக்கால தொழில்நுட்பப் பயன்பாட்டினை மூன்று விடயங்களை அடிப்படையாகக் கொண்டு விளக்குக.

(06 புள்ளிகள்)

04. 1) இலங்கையின் அரசியல் அதிகார வளர்ச்சியின் ஆரம்பகால பிரதானிகள் சிலருடைய பெயர்கள் அடைப்புக்குறிக்குள் இடப்பட்டுள்ளன. அவர்கள் தொடர்பான கூற்றுக்கள் A, B, C என்பனவற்றுடன் அப் பெயர்களினை ஒழுங்குபடுத்தி முறையே எழுதுக.

A – படகுத்துறையை நிர்வகிக்கும் பொறுப்புடையவர்

B – கிராமத்தின் தலைவர்

C – பிரபுவர்க்க உருவாக்கம்

(கமிக, பருமக, தொட்டபோஜக, ராஜா)

(03 புள்ளிகள்)

2) பின்வரும் பணிகளுடன் தொடர்புடையவர்களின் பெயர்களை அடைப்புக்குறிக்குள் இருந்து தெரிவு செய்து எழுதுக.

A – நகரபரிபாலகர்

B – யானைப் பிரிவின் தலைவர்

C – அரச செயலகத் தலைவர்

D – உணவுச்சாலை அதிகாரி

(ஹதி அதெக, நகரகுத்திக, பதகு, பனபெடிக, நகரவடிக, அச அதெக, படகரிக)

(04 புள்ளிகள்)

3) வசப மன்னன் நாட்டின் நிர்வாகத்தை ஒழுங்குபடுத்திய முறையை இரண்டு உதாரணங்களின் அடிப்படையில் விளக்குக.

(05 புள்ளிகள்)

4) புராதன இலங்கையின் கிராமியத் தலைவர்களினால் ஆற்றப்பட்ட மூன்று பணிகளைக் குறிப்பிட்டு ஒன்றை விளக்குக.

(06 புள்ளிகள்)

05. 1) பொது மக்களுக்கான பொதுச் சுகாதார வசதிகளினை மேம்படுத்திய மன்னர்கள் பற்றிய குறிப்புகள் A, B, C என்பனவற்றில் குறிப்பிடப்பட்டுள்ளன. அவற்றுடன் தொடர்புபட்ட மன்னர்களின் பெயர்களை முறையே எழுதுக.

A - கர்ப்பிணித் தாய்மார்களுக்கு வேண்டிய பிரசவ விடுதிகளைக் கட்டிய மன்னன்

B - காய்ச்சல் நோயாளருக்கு தனியே வைத்தியசாலை அமைத்த மன்னன்

C - நாடெங்கும் காணப்பட்ட வைத்தியசாலைகளுக்கு தேவைப்பட்ட வசதிகளை வழங்கிய மன்னன்

(03 புள்ளிகள்)

2) பண்டைய இலங்கையில் காணப்பட்ட இரண்டு கைத்தொழில்களைக் குறிப்பிட்டு அவற்றை ஆற்றியோர் அழைக்கப்பட்ட பெயர்களையும் தருக.

(04 புள்ளிகள்)

3) புராதன இலங்கையின் நெற்செய்கையின் பண்புகள் இரண்டைக் குறிப்பிட்டு அவை மேற்கொள்ளப்பட்ட விதத்தை விளக்குக.

(05 புள்ளிகள்)

4) புராதன இலங்கையின் வர்த்தகத்தின் இருபெரும் பிரிவுகளையும் குறிப்பிட்டு அவற்றில் ஒன்றைப் பற்றி விளக்குக.

(06 புள்ளிகள்)

06. 1) பண்டைய தொழில்நுட்ப அறிவைப் பறைசாற்றும் மூன்று நீர்ப்பாசனக் கால்வாய்களைப் பெயரிடுக.

(03 புள்ளிகள்)

2) பின்வரும் நீர்ப்பாசன தொழில்நுட்ப உறுப்புகளின் பணிகளை முறைப்படி எழுதுக.

A – குளக்கட்டு

B – அலைதாங்கி

C – கலிங்கல்தொட்டி

D – மடைக்கதவு

(04 புள்ளிகள்)

3) இலங்கையில் வரலாற்றுக் காலத்தில் பாரிய குளங்கள் அமைக்கப்பட்டதற்கான தேவைகள் மூன்றினைக் குறிப்பிட்டு அவற்றுள் ஒன்றினை விளக்குக.

(05 புள்ளிகள்)

4) பண்டைய இலங்கைச் சமூகத்தில் பெண்கள் உயர்வாக மதிக்கப்பட்டனர் என்பதனை மூன்று காரணிகளின் அடிப்படையில் விளக்குக.

(06 புள்ளிகள்)

07. 1) வரலாற்றுக் காலத்தில் இலங்கையின் அரச கட்டமைப்பில் சம அதிகாரம் பெற்றிருந்த மூவரைக் குறிப்பிடுக.

(3 புள்ளிகள்)

2) குட்டகண்ணதீசனின் தம்புள்ள விகாரைக் கல்வெட்டில் அரசன் தொடர்பாக பொறிக்கப்பட்டுள்ள இரண்டு விடயங்களைக் குறிப்பிடுக?

(4 புள்ளிகள்)

3) குற்றச்செயல்கள் தொடர்பாகவும் எமது பண்டைய அரசர்கள் கடுமையாகச் செயற்பட்டனர் இவ்விடயம் தொடர்பாக 4ம் மகிந்தனால் நிறுவப்பட்ட வேவல் கெட்டிய கல்வெட்டில் குறிப்பிடப்பட்டுள்ள இரண்டு விடயங்களைத் தந்து அவற்றினை விளக்குக.

(5 புள்ளிகள்)

4) பண்டைய இலங்கையில் கழிவுகளை வெளியேற்றுவதற்கு மேற்கொள்ளப்பட்ட மூன்று முறைகளைக் குறிப்பிட்டு விளக்கு?

(6 புள்ளிகள்)

08. 1) பண்டைக் காலத்தில் கறிகளைச் சுவையூட்ட பயன்படுத்திய முக்கியமான மூன்று பொருட்களைத் தருக?

(3 புள்ளிகள்)

2) கீழே குறிப்பிடப்பட்டுள்ள A, B, C, D என்ற கூற்றுகளுக்குப் பொருத்தமான விடைகளை ஒழுங்குமுறையில் தருக.

A. ஒரு பங்கு அரிசியுடன் ஆறு பங்கு நீர் சேர்த்து நோயளர்களுக்கு தயாரிக்கப்பட்ட கஞ்சிக்கு வழங்கிய பெயர்

B. தானியங்களை வறுத்து அதன் மூலம் பெறப்பட்ட உணவு பழைய நூல்களில் எவ்வாறு அழைக்கப்பட்டது.

C. குளங்களில் இருந்து வயலை நோக்கி வரும் சிறு வாய்க்கால்களில் மீன் பிடித்தல் தொடர்பாக அரசாங்கத்தால் அறவிடப்பட்ட வரி

D. தோணிக்கல கல்வெட்டில் (கி.பி 301 – கி.பி 328) உழுந்து, பயறு இரு தானியங்கள் பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளது. இக் கல்வெட்டை அமைத்த மன்னன்

(4 புள்ளிகள்)

3) a. பண்டைக்காலத்தில் நிறையை அளக்கப் பயன்படுத்தப்பட்ட மூன்று அளவை முறைகளைத் தருக.

(3 புள்ளிகள்)

b. பண்டைக்காலத்தில் நில அளவீட்டுக்காக பயன்படுத்திய இரு அளவை முறைகளைத் தருக.

(2 புள்ளிகள்)

4) சூழல் பாதுகாப்பு தொடர்பாக பண்டைய ஆட்சியாளர்கள், மேற்கொண்ட மூன்று நடவடிக்கைகளை குறிப்பிட்டு விளக்குக?

(6 புள்ளிகள்)

09. 1) பின்வரும் குறிப்புகளின் படி காட்டப்படும் புராதன நகரங்களைப் பெயரிடுக.

A – நீர் பூங்கா நகரம்

B – பௌத்த மதம் செழிப்படைந்த நகரம்

C – தென்கிழக்கே அமைந்த புராதன நகரம்

(03 புள்ளிகள்)

2) இரண்டாம் நகர மயமாக்கச் செயற்பாட்டின் பொழுது உருவான நான்கு நகரங்களினைப் பெயரிடுக.

(04 புள்ளிகள்)

3) புராதன நகரங்களின் வீழ்ச்சிக்கு அடிப்படையாக அமைந்த காரணங்கள் ஐந்தினைத் தருக.

(05 புள்ளிகள்)

4) ஆறாம் பராக்கிரமபாகு மன்னன் ஆற்றிய சேவைகள் மூன்றைக் குறிப்பிட்டு விளக்குக.

(06 புள்ளிகள்)